**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் (அதிகாரசபை) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான "சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

#### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமத்தின் தொடர்படன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | நியமத்தை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டுதலின் கீழ் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பின் பிரகாரம் உரிய காலப்பகுதியினுள் தயாரிக்கப்பட்ட தேறிய சொத்துக்கள் / மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் கீழ் மிகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் கடந்த வருடங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் மிகைகள் மற்றும் மீளாய்வாண்டின் மிகைகள் தனித்தனிாக நிதி நிலமைக் கூற்றில் தேறிய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 106, 107 பந்திகளின் பிரகாரம் அதிகார சபையின் மிகை / பற்றாக்குறை மிகவும் விரிவான முறையில் வெளிப்படுத்துவதற்கு தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நியமத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வெளிப்படுத்தலின் நிலையானதன்மையானது 03 மாத காலத்திற்கான முதலீடுகள், ஊழியர் பணிக்கொடை செலவினம் மற்றும் ஐயக் கடன் செலவினம் ஆகிய செலவினங்களை முன்வைக்கும் போது பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் நியமத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிப்பு வெளிப்படுத்தலின் நிலையானதன்மையானது பேணப்படும் வகையில் கணக்கு அறிக்கைகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 | | |
| | அதிகார சபைக்கு பல்வேறு விதங்களில் கிடைத்த ரூபா 784.61 மில்லியன் தொகையான திறைசேரி மானியங்கள் கணக்கு வைக்கும் போது ஏற்பட்டிருந்த வழுவினை திருத்தும் போது நியமத்தின் 27 ஆம் பந்திக்கு இணங்க திருத்தப்பட்டிருக்கவில்லை. | பின்னோக்கிய சீராக்கல் மேற்கொள்வது எதிர் வரும் வருடத்தில் மேற்கொள்ளப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 | | |
| | அநுராதபுரம் இத்துறுகம 06 வீடுகளுக்குரிய ரூபா 4.90 மில்லியன் மற்றும் காணியின் பெறுமதியானது ரூபா 1.03 மில்லியனாக இணங்காணப்பட்டிருந்த போதிலும் அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளபபட்ட 2022 மே 18 ஆந் திகதிய மதிப்பீட்டு | நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையின் பிரகாரம் அந்த 06 வீடுகளின் பெறுமதி ரூபா 6.12 மில்லியன் மற்றும் காணியின் பெறுமதியின் ரூபா 1.43 மில்லியன் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாத காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு ரூபா 1.62 மில்லியனால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 | | |
| | நியமத்தின் 28 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்தின் வீடுகள் பல்வேறு முறைகளில் அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வருமானச் செலவினங்களை இனங்கண்டு அதிகார சபையினால் அந்த அகற்றலில் விற்பனை சம்பவத்தினை இணங்காண்பதற்கு திட்டவட்டமான கணக்கீட்டு கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இ.பொ.க.நி இலக்கம் 10 இன் 31 ஆம் பிரிவின் பிரகாரம் பணம் சேகரிப்பதற்கு பாதுகாப்பான முறையொன்றாக சட்ட உரித்தினை அதிகார சபையில் தக்கவைத்து உள்ளமையால் லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்தின் வீடுகளின் உரித்தினை கையளித்த பின்னர் விற்பனைகள் வருமான செலவினமாக இணங்காணப்பட்டுள்ளன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 | | |
| | (i) நியமத்தின் 10 ஆம் பந்தி மற்றும் IG 30 மற்றும் 31 பந்திகளுக்கு முரணாக கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 120 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நித்தம்புவ ஓவர்ட் தோட்டத்தின் கிரயம் ரூபா 60 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதிகார சபையால் கையளிக்கபட்ட பிரிவின் நியாப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு அல்லது உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளபபட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை 2024 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆந் திகதி கிடைத்துள்ளது. அந்த அறிக்கையை அடிப்படையாக கொண்டு நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நியமத்தின் 14,15,16,76 பந்திகள் மற்றும் IG 18,19,20 மற்றும் 21 | கடப்பாடுகள் தீர்க்கப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் அந்த | இலங்கை பொதுத்துறை |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கலின் வருமானங்களை இனங்காணாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகார சபைக்கு கிடைத்திருந்த பணத்தில் ரூபா 702.14 மில்லியன் பெறுமதியான அரச மாணியங்கள் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | மாணியங்களை வருமான செலவினங்களாக இணங்கான நடவடிக்கை எடுக்கப்படும். | க் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் திறந்த படி ஒன்றாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைததிருந்த மொறட்டுவ லுனாவ அரசுக்குச் சொந்தமான காணி 2022 ஆம் ஆண்டில் அதிகார சபைக்குச் சாட்டப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகளின் நியாயப் பெறுமதியினை கணிப்பிட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருக்கவில்லை. | லுனாவ செயற்திட்டத்தின் வீடுகளின் விற்பனைப் பெறுமதி வீடமைப்பு செய்ற்திட்டத்தில் அரச மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கான காணிகளின் பெறுமதியை ஒதுக்கி வீடுகளின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் மீண்டும் கணக்கு வைக்கும் தேவைபாடு தொடர்பில் சிக்கல் ஒன்று உருவாகி உள்ளமையால் ஆகும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் பொது திறைசேரியில் இருந்து அதிகார சபைக்கு ரூபா 3 மில்லியன் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 0.73 மில்லியன் பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதிகார சபையினால் முழுமையான பெறுமதி நியமத்திற்கு முரணாக வருமானமாக இணங்கானப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் மிகை 2.28 மில்லியனால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி நடைமுறை பொறுப்புக்கள் அந்தப் பெறுமதியால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தன. | சேலவினங்களை நிர்வகித்தல் தொடர்பில் பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியாவசியமான பொருட்கைளை கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் ரூபா 0.76 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்திற்குரிய வீடுகளை விற்றமையால் கிடைத்த | லுனாவ வீடுகளின் விற்பனை வருமானம் 2020 திசெம்பர் 02 திகதிய அமப/20/1844/306/055 | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு மீண்டும் திறைசேரிக்கு மீளளிப்புச் செய்யப்பட வேண்டும் என அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியில் இருந்து கிடைத்த ரூபா 1,267 மில்லியனில் ரூபா 100 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ:சிய ரூபா 1,167 மில்லியன் நடைமுறைப் பொறுப்புக்களாக காண்பிக்கப்படாது உரிமையான்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் பொறுப்புக்கள் அந்தப் பெறுமதியால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகி உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள் அந்தப் பெறுமதியால் மிகை பெறுமதிக்கு உள்ளாகியிருந்தது. | ஆம் இலக்கத்தின் பிரகாரம் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய பணம் தொடர்பில் மான்புமிகு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை எடுக்கும் வரையிலும் அப் பெறுமதியை திறைசேரி நிதியேற்பாட்டில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | நியமத்தின் 106 மற்றும் 107 ஆம் பந்தியின் பிரகாரம் 11 இற்காக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட மாற்றுச்சீராக்கங்கள் (alternative treatment to SLPSAS 11) இன் பிரகாரம் காலப்பகுதியினுள் பரிமாற்றங்கள் மற்றும் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களினால் உருவாகிய வருமானச் செலவினங்களின் பெறுமதி முக்கியமான தொகுதிகளின் கீழ் தனித்தனியாக காண்பிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களின் முகப்பில் அல்லது குறிப்புக்களாக வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அதிகார சபையால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வருமானச் செலவின வருமானங்கள் மற்றும் மூலதன வருமானமாக தனித்தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 12 | | |
| (i) | நியமத்தின் 14(அ) பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் நடுத்தர மற்றும் குறைந்த வருமானங்கள் பெறுபவர்களுக்கு | நியமம் 07 இன் பிரகாரம் கணக்கு வைக்கப்பட்ட போதிலும் நியமம் (14)(அ) இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | 05 வீடமைப்பு செயற்திட்டங்கள் - அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 05 வீடமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் வணிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த லுனாவ செயற்திட்டத்திற்குரிய 24 வீடுகளை ஒப்படைத்தல் நிதிக் குத்தகையாக கருதப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதற்குரிய கணக்கீட்டு கொள்கையும் இணங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அதிகார சபையால் இந்த நியமத்திற்கு முரணாக மீளாய்வாண்டினுல் விற்பனை செய்யப்பட்ட துறுஇத்துறுகம வீடமைப்பு செயற்திட்டத்தின் 11 வீடுகளுக்கு உரியதாக ரூபா 3.47 மில்லியன் மிகையொன்று இணங்காணப்பட்டிருந்ததுடன் இதற்கான காரணமாக மீளாவாண்டின் மிகை அந்தப் பெறுமதியால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | எதிர்காலத்தில் இந்த நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 13 | | |
| | நியமத்தின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபைக்கு வணிக நோக்கங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 380 மில்லியன் கணக்கு வைக்கப்பட்டுள்ள நித்தம்புவ ஓர்ச்சட் தோட்டம் மற்றும் வெலிசற மில்லகஹவத்த தோட்டம் ஆகிய 02 காணிகள் மீளாய்வாண்டில் முதலீட்டு ஆதனங்களாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகார சபையால் ரூபா 146.76 மில்லியன் பெறுமதியான 02 வீடமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்துடன் இணைந்தாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 05 சேவை நிலையங்களும் முதலீட்டு ஆதனங்களாக காண்பிக்கப்படாது முதலீடுகள் ஆக காண்பிக்கப்பட்டுடிருந்த காரணத்தால் நடைமுறை சொத்துக்கள் அந்த அளவினால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி நடைமுறையல்லாத சொத்துக்கள் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | வணிக நோக்கங்களுக்காக அதிகார சபைக்கு கிடைத்திருந்த வணிக மற்றும் சேவைக் கட்டணங்களுக்காக செயற்திட்ட கலந்தரையாடலின் மூலம் இடம் பெறுகின்றமையால் இறுதி தீர்மானத்தின் பிரகாரம் முதலீட்டு ஆதனமாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 19 | | |
| | கம்பனியால் நியமத்தின் பிரகாரம் திட்ட வட்டமான பங்களிப்பு திட்டத்தினை தயாரித்தல், திட்ட வட்ட நலன் பொறுப்பினை அளத்தல், ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்படாத இரு வகையிலான பொறுப்புக்களை உள்ளடக்குதல், கழிவுப்படுத்தல் ஆயள் கணிப்பீடு மேற்கொள்ளல் ஆகிய பணிகளை மேற்கொள்ளாது ரூபா 2.9 மில்லியன் ஊழியர் பணிக்கொடை செலவினம் மீளாய்வாண்டினுள் இணங்காணப்பட்டிருந்தது. அதனால் இந்த பெறுமதி தொடர்பில் மற்றும் அதற்குரியதாக இணங்கானப்பட்டிருந்த ரூபா 29.64 மில்லியன் ஆன நடைமுறையல்லாத பொறுப்புக்களின் சரியான தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாது இருந்தது. | மிகையூதிய செலவினத்தை கணிப்பிடும் போது சேவைக் காலத்தின் பிரகாரம் மிகையூதியம் கணிப்பிடப்படுவதுடன் மிகையூதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்தின இருந்து விற்கப்பட்ட 171 வீட்டு அலகுகளின் ரூபா 411.05 மில்லியன் பெற வேண்டியதாக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 411.7 மில்லியன் ஆனமையால் அவற்றுக்கிடையே ரூபா 0.66 மில்லியன் ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்தில் விற்கப்பட்ட வீடுகளின் பெறுமதிகளை பதிவேட்டிற்கு உட்படுத்தும் போது ஏற்பட்டுள்ள தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதியை கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 16 பெற வேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகள் ஆகியவற்றிற்கு இடையே | கணக்கு மீதிகள் மற்றும் உரிய பட்டோலைகள் ஆகியவற்றுக்கு இடையே நிலவும் மீதிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை இணங்காணுவதற்கு மற்றும் உரிய ஆரம்ப மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டினை இணக்கம் செய்து சரியான பெறுமதிகளை கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 7.8 மில்லியன் வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | வீட்டுக் கடன்களை அறவிடும் போது கடன்பட்டோரால் முற்பணமாக செலுத்திய ரூபா 1.81 மில்லியன் தொகை பெற வேண்டிய மீதிகளில் இருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய கணக்குகள் ரூபா 1.81 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த கடன் தவணைகளின் பெறுமதி அதற்கு அடுத்த கணக்கீட்டு ஆண்டு முதல் தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 702.6 மில்லியனாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் இணங்காணப்பட்டிருந்த ரூபா 23.4 மில்லியன் ஆன ஐயக் கடன் ஒதுக்கத்தினை கழித்து தேறிய பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்டப்டிருந்தது | அதனை தனித்தனியாக காண்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் அதிகாரசபைக்கு 2022 மே 18 ஆம் திகதி பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டிற்கான அனுராதபுரம் துரு இதுருகமவில் உள்ள 102 காணிகளின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 23.66 மில்லியனாக இருந்த போதிலும், அதிகாரசபை கணக்குகளில் அந்த பெறுமதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, அதிகாரசபையின் நடைமுறை அல்லாத | 2013 முதல் 102 வீடுகள் அகற்றப்பட்டதால், காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை கணக்கு வைக்க முடியாது. | சரியான மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு ரூபா 4.89 மில்லியன் குறைவாகக் கணக்கிடப்பட்டது. | | |
| (ஊ) | அதிகாரசபையின் மீளாயவாண்டில் ரூபா 1.93 மில்லியன் படியாக நானாவித கடன்கள் கணக்கிலிருந்து இரண்டு முறை மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய நானாவித கடன் பட்டோர் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டமையால், நானாவித கடன் இருப்பு கணக்கு (நடைமுறை அல்லாத சொத்துக்கள்) ரூபா 1.93 மில்லியனால் குறைவாகக் கணக்கிடப்பட்டு, அதன் மீது அறவிடப்பட்ட கடன் வட்டி வருமானமும் ரூபா 0.17 மில்லியனால் அதிகமாக மதிப்பிடப்பட்டது. இதன் காரணமாக நானாவித கடன் பட்டோர் மீதி (நடைமுறைச் சொத்துக்கள்) ரூபா 2.11 மில்லியன் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி அறிக்கையிடல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | அதிகாரசபையின் மொத்த நிலையான வைப்புத்தொகையில் 65 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 26 நிலையான வைப்புகளின் மாதிரி சோதனையின்படி, மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 176.62 மில்லியனாக இருந்த போதிலும், அதிகாரசபையால் அந்த நிலையான வைப்புத்தொகைக்கான வட்டி நிறுத்தி வைக்கப்பட்ட வரிச் செலவை கழித்து ரூபா 174.89 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால், நிலையான வைப்புத்தொகையின் மீது செலுத்த வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட வரி ரூபா 1.73 | நிறுத்தி வைக்கப்பட்ட வரியை கணக்குகளில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வரியை கணக்கு வைப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் கணக்கில் காண்பிக்கப்படவில்லை. | | |
| (ஏ) | லுனாவ வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 14.03 மில்லியன் அதிகாரசபையினால் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் சீர்படுத்தாததன் காரணமாக, மீளாய்வாண்டின் நடைமுறைப் பொறுப்புகள் இந்த பெறுமதியால் குறைவாகக் கணக்கிடப்பட்டது. | இந்த பரிவர்த்தனை தொடர்பான பட்டியலை சரியான சரியான பட்டியலாக ஏற்றுக்கொள்வதில் சிக்கல்கள் இருந்ததால், சரியான பட்டியல் சமர்ப்பிக்கப்படும் வரை கணக்குகளில் உள்ளடக்க முடியாது. | செலுத்த வேண்டிய தொகையானது பொறுப்பாக இனங்காணப்பட்டு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலை

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டும் என்பதுடன், அது அரசாங்கத்தின் திரண்ட நிதியில் இருந்து ஒரு பகுதியாகப் பெறப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் இறுதியில், 15 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், அதிகாரசபைக்கு எந்த மூலதனமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபைக்கு பெற வேண்டிய ரூபா 5,000 மில்லியனான தொகை அமைச்சின் செயலாளரின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டின் போது கோரப்பட்டிருந்தது. | அரசின் மூலதனப் பங்களிப்பை அதிகாரசபைக்கு பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையானது சொத்து அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணங்களை அறவிடுவதை நிறுத்தியதால், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அந்த வருமான ஆதாரத்தை இழந்துள்ளது. சேவைக் கட்டணம் நிறுத்தப்பட்ட நேரத்தில், நகர அபிவிருத்தி | அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, மேற்கண்ட சேவைக் கட்டண நிலுவைத் தொகை தொடர்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 207 மில்லியன் தொகையை செலுத்த வேண்டும் என குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்க வேண்டும். |

அதிகாரசபையால் அறவிடப்பட்டிருந்த ரூபா 207.33 மில்லியனான சேவைக் கட்டணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பெறத் தவறியிருந்தது.

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையால் புனரமைப்பு அடிப்படையிலும் விற்பனை அடிப்படையிலும் வழங்கப்பட்ட வீடுகளிலிருந்து மற்றும் ஏனைய கடன் நிலுவைகளிலும் கடனை வசூலிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், அதிகாரசபையின் கடன் அறவீடு செய்வதிலான முன்னேற்றம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) புனரமைப்பு அடிப்படையில் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட 05 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில், மீளாய்வாண்டின் இறுதியில் 363 வீடுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தவணைப் பெறுமதி ரூபா 102.83 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 05 வீடமைப்புத் திட்டங்கள் திட்டவட்டமாக குறிப்பிடப்படாததால், பகுப்பாய்வு ரீதியாக பதிலளிப்பது கடினம். | கடனை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கடன் மீதி ரூபா 36.32 மில்லியனாகவும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 39.09 மில்லியன் ஆகும். மொத்த கடன் தவணை மதிப்பில் அந்த மதிப்பு முறையே 35.32 சதவீதம் மற்றும் 38.01 சதவீதம் ஆகும். | | |
| (ii) | விற்பனையின் அடிப்படையில் அதிகாரசபையால் வழங்கப்பட்ட 02 வீட்டுத்திட்டங்கள் தொடர்பாக, மீளாய்வாண்டின் இறுதியில் 32 வீடுகளிலிருந்து பெறப்பட வேண்டிய மொத்த கடன் தவணைத் தொகை ரூபா 39.86 மில்லியன் ஆகும் அவற்றுள் 2-5 வருடங்களாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 9.2 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், 5 ஆண்டுகளை விஞ்சிய அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட மீதி ரூபா 24.61 மில்லியன் ஆகும். அந்த பெறுமதி மொத்த கடன் தவணை பெறுமதியில் முறையே 23.1 சதவீதம் மற்றும் 61.75 சதவீதம் ஆகும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை அடிப்படையில் வழங்கப்பட்ட 02 வீட்டுத்திட்டங்கள் திட்டவட்டமாக குறிப்பிடப்படாததால், பகுப்பாய்வு ரீதியாக பதிலளிப்பதில் சிக்கல் உள்ளது. | விற்பனை செய்யப்பட்ட வீடுகளில் இருந்து மொத்த தொகையையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்பட்ட லுனாவ வீடமைப்புத் திட்டத்தில் இருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 149 வீட்டுப் பயனாளிகள் மாத்திரமே முழுமையான வீட்டு பெறுமதியை செலுத்தியுள்ளனர், மேலும் 207 வீட்டுப் பயனாளிகளிடமிருந்து பெற வேண்டிய பெறுமதி ரூபா 548.45 மில்லியன் ஆகும். | அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால்,<br>• வீட்டின் முழு விற்பனை பெறுமதியை செலுத்துதல்<br>• விற்பனை மதிப்பில் 25% செலுத்தி வீடுகளை முன்பதிவு செய்தல்<br><br>மேலும், விற்பனை மதிப்பில் 50% மற்றும் மீதமுள்ள 50% ஒரு வருடத்திற்குள் 6.25% தொகையான வருடாந்த வட்டி வீதத்திற்கு இணங்க செலுத்தி நிறைவு செய்தல் எனும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் இது அதிகமான வாங்குபவர்களுக்கு வீடுகளின் உரித்தினை பெற உதவியது. | விற்பனை செய்யப்பட்ட வீடுகளில் இருந்து மொத்த தொகையையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| ii ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பந்தி | நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி, 2021 ஆம் ஆண்டில், பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் பேரில் மாத்திரம் பதவியணிக்கு 2021 செப்தம்பர் முதல் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமையால முன்னர் நிலவிய சம்பத்தை விட அண்ணளவாக ரூபா 9.9 மில்லியன் 2023 திசெம்பர் அளவில் அதிகாரசபையால் | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்படி பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்கூறிய பணியாளர் முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தல்களுக்கு தேவையான ஒழுங்குபடுத்தில்கள் மேற்கொள்ள வரிசை அமைச்சிற்கு அனுப்பப்படும். | தாபனவிதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் தரப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலவிட நேர்ந்திருந்தது. | | |
| (ஆ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் | நகர குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை வகுத்து, கொள்கையை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக இந்த அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அதிகாரசபை நிறுவப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும் தேசிய கொள்கையொன்றை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரசபை தவறியுள்ளது. | வரைபாக்கப்பட்ட விதிகள் மற்றும் பணிகளின் (TOR) மூலப் பிரதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. | சட்டத்தின் நோக்கங்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |
| | (i) 10 ஆம் பிரிவு | 2017 ஏப்ரல் மாதத்தில் தலைவர் உட்பட 14 உறுப்பினர்களுக்கு மிகாத ஆலோசனைக் குழுவை அதிகாரசபையால் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையின் முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் போன்ற அதிகாரசபையின் நோக்கங்களுடன் தொடர்புடைய பணிகள் அடையாளம் காணப்படவில்லை. | 2017 ஆம் ஆண்டு முதல், அதிகாரசபையின் நோக்கங்கள் தொடர்பாக சட்டத்தின் 15 வது பிரிவின் கீழ் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |
| | (ii) 15 ஆம் பிரிவு | நிர்மாணப் பொறியியற் பணிகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிகார சபைக்கு | சட்டத்தின் பிரிவு 15 இல் காட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க, ஒரு பொறியியல் திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்க | முறையான சாத்தியக்கூறு ஆய்வோடு வீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரம் இருந்தாலும், நேரத்தையும் செலவையும் குறைக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியற் திட்டமாக அதனை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஆராயும் நோக்கில் துரு இத்துறுகம வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்ப ட்டுள்ள போதிலும், அதற்காக ஒரு வீடு கட்டுவதற்கு பதிலாக ரூபா 4.9 மில்லியன் செலவில் 06 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. | ான சாத்தியக்கூறுகளை சரிபார்த்து, திருத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 06 வீடுகளை நாம் நிர்மாணித்துள்ளோம். | |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெறாமல் பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் பேரில், அதிகாரசபையால் கடந்த வருடத்தில் ரூபா 958 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 541 மில்லியன் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதி அமைச்சரின் ஒப்புதலைப் பெறுவதற்கு வரிசை அமைச்சின் செயலாளர் மூலம SMUD/F/01/USDA ஆம் இலக்க 2022/11/25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோரிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. | நிதிச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 4/2022<br>(i) 2.3 ஆம் பிரிவு | அரசாங்க நிறுவனங்கள் வாகனங்களுக்கான வாடகை ஒப்பந்தங்கள் அல்லது புதிய குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் நிறுத்தப்பட்டுள்ளதுடன் , மற்றும் தற்போதுள்ள ஒப்பந்தங்களின் காலத்தை நீட்டிக்க அல்லது மாற்று ஒப்பந்தங்களைச் செயல்படுத்த திறைசேரியின் முறையான | அதிகாரசபையிடம் 07 வாகனங்கள் மாத்திரமே உள்ளதுடன், அதிகாரசபையின் உத்தியோகபூர்வ தேவைகளுக்கு போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தினால், திறைசேரி அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையினால், வாடகை வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரம் தேவைப்படுகிறது, ஆனால் செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் அதிகாரசபையினால் 3 வாகனங்கள் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2.5 ஆம் பிரிவு | ஊழியர்களுக்கு புதிய கொடுப்பனவுகள் அறிமுகப்படுத்தப்படக் கூடாது மற்றும் ஏற்கனவே உள்ள கொடுப்பனவுகளில் அதிகரிப்பு செய்யப்படக்கூடாது என்பதை உறுதிப்படுத்துமாறு பணிப்பாளர் சபை அறிவுறுத்தல்களை வழங்கியுள்ள போதிலும், அதற்கு மாறாக, அதிகாரசபையால் நிறைவேற்றுத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் MM – 1 சம்பள படிநிலையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு முறையே ரூபா 15,000 மற்றும் ரூபா 5,000 படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 8 மில்லியனுக்கும், முந்தைய ஆண்டில் நிறைவேற்றுத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மட்டும் ரூபா 0.76 மில்லியன் போக்குவரத்துச் செலவினப் படிகள் பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் பேரில் செலுத்தப்பட்டது. | போதிய எண்ணிக்கையிலான சாரதிகள் இல்லாத காரணத்தினால், பணிபுரியும் மட்டுப்படுத்தப்பட்ட சாரதிகள் விசேட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் 3.Xiii இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், தற்போதுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 210.59 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 364.72 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 154.13 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் வீடுகளின் விற்பனை வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 207.73 மில்லியனால் குறைவடைந்தமை, போக்குவரத்து படிகள், வாகன வாடகை செலவினம், வாகன பராமரிப்பு செலவினம் ஆகியவை முறையே ரூபா 6.08 மில்லியனால், ரூபா 3.29 மில்லியனால் மற்றும் ரூபா 4.33 மில்லியனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவினம விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுக்கு உரியதாக நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விபரம் | 2023<br>ரூபா<br>மில்லியன் | 2022<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|
| திறைசேரி மானியம் மேம்படுத்தல் செலவினம் | 151.49 | 155 |
| பிற்போடப்பட்ட வருமானம் - நிலையான சொத்துக்களின் அடிப்படையில் | - | 11.4 |
| வட்டி வருமானம் | 240.36 | 161.8 |
| ஏனைய வருமானம் | 1.44 | 12.99 |
| ஆளணி வேதனம் | 119.74 | 118.95 |
| போக்குவரத்துச் செலவினம் | 1.56 | 1.95 |
| மிகை | 210.59 | 364.72 |

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் வட்டி வருமானம் 48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதற்கு நிலையான வாய்ப்புக்களின் மீதான வட்டி வருமானம் 50 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் அதிகாரசபையில் ஒட்டுமொத்த வருமானத்தில் 33.62 சதவீதம் அரச மானியங்களால் மற்றும் 7 சதவீதத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து 59 சதவீதம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தும் ஈட்டப்பட்டிருந்தது.

(இ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பராமரிப்பு செலவினம் 47 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அதற்கு வாகன பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 3.93 மில்லியனிலிருந்து ரூபா 8.26 மில்லியன் வரை 110 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த வருடத்தில் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 18.4:1 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 33.7:1 வரை அதிகரித்திருந்தது. எனினும், நடைமுறைச் சொத்துக்களினுள் ரூபா 146.76 மில்லியன் பெறுமதியான முதலீட்டுச் சொத்துக்கள், ரூபா 207.33 மில்லியன் பெறுமதியான

நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியதாக காணப்பட்டது. அவ்வாறே, பொது திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 1167 மிலலியன் மற்றும் கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 14.03 மில்லியன் பெறுமதியான நடைமுறைப் பொறுப்புகளினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில், அதிகாரசபையினால் புனரமைப்பு அடிப்படையிலும் விற்பனை அடிப்படையிலும் கட்டப்பட்ட 1714 வீடுகளில் 09 வீட்டுத்திட்டங்களுக்குரிய 588 வீட்டுக் கடன் அலகுகள் தொடர்பான உரித்துறுதிகளை வழங்கியிருந்த போதிலும், 1126 வீட்டு அலகுளுக்கான வீட்டுரிமையாளர்களுக்கு உரித்துறுதிகளை வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடையாதது மற்றும் கூட்டு ஆதன சான்றிதழ்கள் பெறுவதில் தாமதம் ஆகியவையே இதற்கு முக்கிய காரணமாகும். | தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், உரிய முறையில் கூட்டு ஆதனச் சொத்துக்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கும், "2018 இன் 23 ஆம் இலக்க தொடர்மாடி குடியிருப்புகள் உரித்துறுதி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி குடியிருப்புகளுக்கும் உரியதாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையையும் அந்த சட்டத்தில் உள்ளடக்கி சட்டத்தின் செல்லுபடியான காலத்தை நீடிப்பு செய்வதற்கு'' எனும் பரிந்துரை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப சிக்கல்களை தீர்த்து, விரைவில் சொத்துக்களை முறையாக அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஆ) மீனவ மக்களுக்காக கட்டப்பட்ட அங்குலான அடுக்குமாடி குடியிருப்பில் சினிமாக்காரர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பணம் வசூலிக்காமல் பூரண அளிப்புப் பத்திரத்தின் மூலம் ரூபா 62.87 மில்லியன் பெறுமதியான 53 வீட்டு அலகுகளின் உரித்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நியாயமான தொகையொன்றை அந்த நலனாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, மேலும் 38 வீட்டு | 2022 திசெம்பர் 04 ஆந் திகதிய சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின்படி, பூரண அளிப்புப் பத்திரங்க இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மேலும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நியாயமான மதிப்புக்கான ஒப்பந்தங்களில் ஈடுபடுமாறு மேற்படி வீட்டுப் பயனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அந்த எழுத்துமூலமான அறிவித்தலின் பிரகாரம், 53 பயனாளிகளில் 27 பேர் ஒப்பந்தம் செய்து 11 பேருக்கு வீடுகளை மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வீட்டு அலகுகளிலிருந்து நியாயமான தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகளில் இருந்து ரூபா 55.48 மில்லியன் பெறத்தக்கதாக இருந்தது. சட்டமா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் பணம் செலுத்தாதவர்களின் பூரண அளிப்பினை இரத்துச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 15 வீடுகளை அகற்றும் பணிகளையும் அதிகார சபை மேற்கொண்டுள்ளது. | எடுக்கப்பட்டுள்ளது. அந்த வீடுகள் புதிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, 53 வீடுகளில் 38 வீடுகள் முறையாக அகற்றப்பட்டுள்ளன. | |
| (இ) | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதியில் 20 சதவீதம் சேர்த்து, விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனினும், அதற்கு நேர்மாறாக, பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் ஊடாக அரசாங்கத்தின் மதிப்பீடு மட்டுமே வசூலிக்கப்பட்டு அதிகாரசபையின் 24 ஊழியர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்ட காரணத்தால் அரசாங்கத்திற்கு ரூபா 20.68 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு விற்கப்பட்ட வீட்டுப் அலககளில் ரூபா 95.34 மில்லியன் அதிகாரசபைக்கு பெற வேண்டியதாக காணப்பட்டது. | முறையான நடைமுறைக்கமைவாக 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் இலக்கம் 3 இன் கீழ் சாட்டப்பட்டுள்ள முகாமைத்துவ அதிகாரங்களின்படி தகுதிவாய்ந்த 24 ஊழியர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபைக்கு சொந்தமான ரியல் எஸ்டேட் எக்ஸ்சேஞ்ச் பிரைவேட் லிமிடெட் கம்பனியால் கட்டப்பட்ட ரூபா 44.78 மில்லியன் பெறுமதியான 67 சஹஸ்புர வர்த்தக அலகுகள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 57 சேவை அலகுகள் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அதிகாரசபைக்கு குத்தகை வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்த போதிலும், பூரண | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும், வணிக அலகுகள் முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | வணிக அலகுகளில் இருந்து வருவாய் ஈட்டுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளிப்புப்பு பத்திரத்தின் மூலம் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் கீழுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் காரணமாக அந்த குத்தகை வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | | |
| (உ) | 2020 திசெம்பர் 22 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானங்களுக்கு முரணான, உப்பந்தத்தின் பிரகாரம் ரூபா 9.3 மில்லியன் மதிப்பிலான லுனாவா வீட்டுவசதி அமைப்பில் உள்ள மூன்று வீடுகளின் விற்பனை விலையை அறவிடாது உரித்து கையளிக்கப்பட்டிருந்தது. | உரித்துறுதியை கொடுக்கும் நேரத்தில், அதிகாரசபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி அனைத்து பணத்தையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவையின் தீர்மானங்களின்படி அகற்றப்பட்ட வீடுகளில் இருந்து விற்பனைப் பணத்தை மீளப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | வீடமைப்புத் திட்ட பயனாளிகளிடம் உரிமையை ஒப்படைத்துள்ள போதிலும், பொரளை வதுலு செவன வீடமைப்புத் திட்டம், லிதுல தலவாக்கலை வீடமைப்புத் திட்டம், அங்குலான சயுருபுர வீடமைப்புத் திட்டம் ஆகியன அமைந்திருந்த காணியின் உரிமையை அதிகார சபைக்கு சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வதுலு செவன வீடமைப்புத் திட்டத்தின் (பொரளை) காணியின் உரிமையானது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (UDA) சொந்தமானது.<br>தலவாக்கலை வீடமைப்புத் திட்டக் காணி (லிந்துலை) எமது அதிகாரசபைக்கு மாற்றுவது தொடர்பான நடவடிக்கைகளை மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்ட நடவடிக்கைகள் முடியும் வரை மேற்கொள்ள முடியாது.<br>அங்குலான ‘‘சயுருபுர’’ வீடமைப்புத் திட்டத்துடன் தொடர்புடைய 03 காணிகளில் 02 பகுதிகள் அதிகாரசபையால் சட்டரீதியாக சுவீகரிக்கப்பட்டுள்ளன. | காணியின் உரிமையை அதிகார சபைக்கு சுவீகரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (எ) | வறிய மக்களுக்காக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் நடுத்தர வருமானம் பெறுவோருக்கு விற்பனை அடிப்படையில் | இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரர் (அரச பொறியியல் கூட்டுத்தாபனம்) மற்றும் செயற்திட்ட முகாமையாளர் (அரசாங்க அபிவிருத்தி நிர்மாணக் | வீட்டுத் திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி கட்டப்பட வேண்டும் மற்றும் வீடமைப்பு திட்ட செலவுகள் |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட மொரட்டுவ லுணாவ வீடமைப்புத் தொகுதியின் சுவர்களில் இருந்து நீர் கசியாதிருப்பதற்கான பூச்சு பூசப்படாமையால், வீடமைப்பு திட்டம் மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த பின்னர் சுவர்களில் நீர் கசிவதாக அதிகார சபைக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. தற்போது ரூபா 61.58 மில்லியன் மதிப்புள்ள வங்கி பிணைமுறியும் இரத்து செய்யப்பட்டுள்ளது. இக்கட்டடங்களை சீரமைப்பது தொடர்பாக ரூபா 41.38 மில்லியன் (வற் நீங்கலாக) லுனாவா வீட்டு அலகுகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து செலுத்த பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பணிகளை முன்பே செய்திருந்தால், அதற்கான செலவை வீடு வாங்குபவர்களிடமிருந்து வசூலித்திருக்கலாம், ஆனால் மோசமான முகாமைத்துவ தீர்மானத்தினால் அந்த வாய்ப்பு தவறிவிடப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம்) மற்றும் செயற்திட்ட ஆலோசகர் (அரச பொறியியல் கூட்டுத்தாபனம்) ஆகிய நிறுவனங்களிடம் எழுத்துப்பூர்வ விசாரணையில் இது அத்தியாவசியமானதாக கருதப்படவில்லை என்றும் அதில் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர். எதிர்காலப் பணிகளுக்காக இது குறித்து வரிசை அமைச்சுக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கூடிய விரைவில் வங்கி உத்தரவாதத்தை புதுப்பித்து தருவதாக அரச பொறியியல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.<br><br>இந்த நீர்க் கசிவைச் சரிசெய்வதற்கான 10/2023/10 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அதிகாரசபையின் உள் வருவாயிலிருந்து நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | துல்லியமாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்கு வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்டேட் எக்ஸ்சேஞ்ச் (தனியார்) கம்பனியை கையகப்படுத்தும் போது ஏற்பட்ட நிதி மோசடி தொடர்பாக, 2021 ஒக்தோபர் 28 ஆந் திகதி சட்டமா அதிபர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, நட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஒதுக்க | வரிசை அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் இந்த விடயத்தை ஆராய குழுவொன்றை நியமித்துள்ளது. அதன் அறிக்கை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடியுமா என்பதை பரிசீலிக்க நிதிப்பிரமாணம் 103 (அத்தியாயம் II) இன் கீழ் உரிய சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது தொடர்பில் பொறுப்புள்ள நபர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பினை துல்லியமாக கணக்கிட வேண்டும் என்று கூறப்பட்டாலும், 2024 ஏப்ரல் மாதம் வரையிலும் வரிசை அமைச்சு அதற்கான பணிகளை மேற்கொள்ளவில்லை. | முறையான சட்ட ஆய்வுக்குப் பிறகு, இந்தத் தொகை நிதிககூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவுள்ளது. | |

### 3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் ஒவ்வொரு வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகளுக்கும் தனித்தனியான கடன்பட்டோர் கணக்குகள் கடன் சேகரிப்புப் பிரிவினால் பராமரிக்கப்படுகின்றன, ஆனால் கணக்குப் பிரிவு க கடன்பட்டோருக்கு தனியான பேரேட்டுக் கணக்குகளை பராமரிக்காததால், கடன் சேகரிப்புப் பிரிவின் கடன் பட்டோர் மீதிகள் மற்றும் கணக்கு பிரிவின் கடன் பட்டோர் மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 7.8 மில்லியனான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணினி மென்பொருளின் கீழ் கடன் நடைமுறையை செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேலும் தனித்தனியாக கடன் பட்டோருக்கான கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. கடன் சேகரிப்புப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவின் ஒருங்கிணைந்த கடன் தொகுதியை கணக்கீட்டு முறையுடன் இணைக்க திட்டமிட்டுள்ளன. | ஒவ்வொரு கடன் பட்டோருக்கான தனித்தனி கடன் பட்டோர் மற்றும் கடன் பட்டோர் கட்டுப்பாட்டு கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அநுராதபுரத்தில் ரூபா 4.9 மில்லியன் செலவிடப்பட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பத்தின் கீழ் (சுதாரகா தொழில்நுட்பம்) கட்டப்பட்ட 06 வீடுகள், மனிதர்கள் வாழ்வதற்கு பொருத்தமற்றது என தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மற்றும் அதிகாரசபையின் பொறியியலாளர் ஒருவரால் சான்றளிக்கப்பட்டது. | இந்த 06 வீட்டு மனைகள் அகற்றப்பட்ட பின்னர் காவலாளியின் ஒப்பந்த சேவையை நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். | ஒரு செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், ஒரு சாத்தியவள கற்றை நடத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இங்கு வீடுகள் கட்டப்பட்ட போதிலும், எதுவித பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லைஎன்பதுடன், 2013 முதல் 2024 ஏப்ரல் வரை 11 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது. இருப்பினும், 2018 முதல் ஒரு காவலாளி பணியமர்த்தப்பட்டு, அவரது சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக ரூபா 2.75 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டுள்ளது. | | |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2019 ஆம் ஆண்டு கடிதம் மூலம், புதிய மாதிரியின் படி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை புதுப்பித்து, அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்குமாறு கோரியுள்ள போதிலும், 2024 மார்ச் வரையிலும் அந்த தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படவில்லை. | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை பழைய மாதிரியின்படி தயாரிக்கப்பட்டதால், அது புதிய மாதிரியின்படி தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை விரைவில் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பதவியணி 151 ஆகவும், அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப் பதவியணி 29 ஆகவும் இருந்தது. அந்தத் திகதியில் உள்ளபடியான நிரந்தரப் பதவியணி 116 ஆகவும், ஒப்பந்தப் பதவியணி 2 ஆகவும் இருந்தது. இதன் விளைவாக, நிரந்தரப் பதவியணி மற்றும் ஒப்பந்தப் பதவியணியில் முறையே 35 மற்றும் 27 வெற்றிடங்கள் நிலவியதுடன்ஒப்பந்தப் பதவியணியின் 01 மிகை காணப்பட்டது. இத்தகைய வெற்றிடங்கள் நிலவுதல் நிறுவனத்தின் குறைந்த | சுற்றறிக்கையால் விதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு வரம்புகள் காரணமாக, நிறுவனத் தேவைகளைக் குறிப்பிட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு வரிசை அமைச்சின் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதிகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

செயல்திறனை நேரடியாகப் பாதித்தது.

**4. கணக்களிதகைமையும் நல்லாலுகையும்**

**4.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சிலாபம் வீடமைப்பு செயற்திட்டம் கட்டம் 01 இன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நிலத்தை அலங்கரிக்கும் வேலைகள், சஹஸ்புர வீடமைப்புத் திட்டத்தில் கொன்கிறீட் கூரைகளுக்கு நீர் பாதுகாப்பு மற்றும் அங்குலான வீடமைப்புத் திட்டத்தில் பாதுகாப்பு வேலி அமைத்தல் ஆகிய இந்த 03 வீடமைப்புத் திட்டங்களுக்கு ரூபா 22.25 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக முன்னேற்றம் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | சமுதாய சங்கங்களை நிறுவுதலின் கீழ் அங்குலான "சயுரபுர" வீடமைப்புத் திட்டத்தில நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக CCTV கமராக்களை நிறுவுவதற்கு ரூபா 0.16 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>சிலாபம் "நரியகொடெல்ல" வீடமைப்புத் திட்டத்தில் வடிகால் அமைப்பை மேம்படுத்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கும் தயாரிக்கப்பட்ட புதிய மதிப்பீட்டின் பிரகாரம் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாமையால் பணிகளை மேற்கொள்ள சிலாபம் பிரதேச சபைக்கு முடியாது என அதிகார சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்குலான வீடமைப்புத் திட்டம் - பாதுகாப்பான வேலி அமைப்பது பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்படவில்லை.<br><br>சஹஸ்புர வீடமைப்புத் திட்டம் - கூரை ஸ்லெப்பின் நீர் பாதுகாப்பிற்காக "நாகமு புரவர" திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மீதமுள்ள நிதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் பௌதீக ரீதியாக இல்லை என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் எமது அதிகாரசபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்த்த செயல்திறனை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், அரச தனியார் பங்குடமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரசபையின் நடுத்தர வருமான வீடமைப்பு செயற்திட்டங்களின் ஆரம்ப பணிகளில் உள்ளடங்கும் செயற்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்திற்குள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு காணிகளை அடையாளம் காண்பதில் 100 வீத முன்னேற்றம் எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பௌதீக ரீதியாகவோ அல்லது நிதி ரீதியாகவோ எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. | காணிகளை அடையாளம் காணல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் தேவையில்லை என்பதால், நிதி முன்னேற்றம் எதுவும் காண்பிக்கப்படவில்லை. | செயல்பாட்டுத் திட்டத்தில் தகவல் சரியாக சேர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 05 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 8 சதவீதத்திலிருந்து 26 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்ட அதேவேளை நிதி முன்னேற்றம் 14 வீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. இந்த 5 செயற்திட்டங்களுக்கும், அதிகாரசபையின் உள்ளக ஈட்டங்களில் இருந்து ரூபா 127.43 மில்லியன் செலவிட எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உண்மையில் ரூபா 7.55 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. | வத்தளை வெலிசர வீடமைப்பு செயற்திட்டத்திற்கான முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. 2023 ஆம் ஆண்டுக்கான நிட்டம்புவ ஓர்சட்வத்த வீடமைப்புத் திட்டத்தின் காணி மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெறாததால் மேலதிக பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. ஶ்ரீ ஜயவர்தனபுர கலப்பு அபிவிருத்தி திட்டத்திற்கு ஒவ்வொரு | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடையக்கூடிய இலக்குகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய பூர்வாங்க அனுமதிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. துடுவேகொட வீடமைப்பு செயற்திட்டம் - கட்டம் I மற்றும் II இற்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (NPD) பரிந்துரையைப் பெறுவதற்கு 2023.11.16 அன்று முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.
அத்துருகிரிய வீடமைப்புத் திட்டத்துடன் தொடர்புடைய காணியை கையகப்படுத்தும் நடவடிக்கையை அந்த வருடத்திற்குள் பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால், உரிய நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், பயன்படுத்தப்படவில்லை.
மேற்கூறிய விடயங்கள் காரணமாக, திட்டமிடப்பட்ட எஞ்சிய 05 திட்டமிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் நிதி முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.